

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை


- குறள் : 1031

ISBN 978-93-87009-54-7

சங்க இலக்கியத்தில் தொழில்களும் தொழில்நுட்பப்பதிவுகளும் - 2019

# சங்க இலக்கியத்தில்
# தொழில்களும் தொழில்நுட்பப்பதிவுகளும்

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை



பதிப்பாசிரியர்

முனைவர் பா.அருள்ஜோதி

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி 642 001.

# நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீட்டு மதிப்பேற்றுக் குழுவின் தகுதி,
ஐ.எஸ்.ஓ.9001-2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி -642 001.

## தமிழ்த்துறையும் ஸ்ரீ இராகவேந்திரா மக்கள் இயக்கமும் இணைந்து நடத்திய
## சங்க இலக்கியத்தில் தொழில்களும் தொழில்நுட்பப் பதிவுகளும்

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வு மாநாடு - 2019

**(International Conference)**

(26.07.2019)

## சான்றிதழ்

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த்துறையும் ஸ்ரீ இராகவேந்திரா மக்கள் இயக்கமும் இணைந்து நடத்திய சங்க இலக்கியத்தில் தொழில்களும் தொழில்நுட்பப் பதிவுகளும் என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வு மாநாட்டில் முனைவர் / பேரா / செல்வன் / செல்வி ந. ஜெயசுதா, தமிழ் உதவிப் பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி அவர்கள் அகநானூறு காட்டும் தொழில்கள் என்னும் தலைப்பில் கட்டுரையாளராக/ பங்கேற்பாளராக/ அமர்வுத் தலைவராகக் கலந்து கொண்டார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| முனைவர் பா.அருள்ஜோதி | வே.நா. செந்தில் இராகவேந்திரர் | முனைவர் ச.முத்துவேல் | முனைவர் பொ.மா.பழனிசாமி | டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் |
| கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் | கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் | தமிழ்த்துறைத் தலைவர் | முதல்வர் | தலைவர் |

# அகநானூறு காட்டும் தொழில்கள்

52

முனைவர் ந.ஜெயசுதா,
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி.

சங்க இலக்கியங்கள் காலத்தால் பழமையாயினும், புதுயுகங்களில் புதுப்புதுக் கருத்துக்களையும் வடிவங்களையும் நமக்கு அளித்துக் கொண்டிருக்கும் ஒரு பொற்களஞ்சியம். இக் களஞ்சியங்களில் இல்லாத துறைகள் இல்லை. ஆத்தகைய பொற்களஞ்சியங்களைப் பெற்றது தான் சங்ககாலம் அன்று முதல் இன்று வரை சமுதாய அமைப்பிற்கு இன்றியமையாததாகக் கருதப்படுவது தொழில்கள். இத்தொழிலகள் சங்க காலத்தில் அமைந்திருந்த நிலையினை அகநானூற்றின் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நில அடிப்படையில்

சங்க காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்ற ஐந்து நில அமைப்பில் நிலத்திற்குத் தக்க பல்வேறுபட்ட தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர்.

## நெசவுத் தொழில்கள்

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளில் ஒன்று உடை. கற்காலத்தின் வளர்நிலையில் மரஇழைகள், பட்டைகள், விலங்குகளின் தோல்களையெல்லாம் உடையாகப் பயன்படுத்தியுள்ளனர். ஐந்நில அடிப்படைக்குப் பின் வேளாண் முறையில் பருத்தி சாகுபடி செய்து ஆடைகளை உருவாக்கியுள்ளனர்.

> "கல் சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்
> தாழி முதல் கலித்த கோழியைப் பருத்தி"

(அகம் 129)

என்ற அகப்பாடல் மூலம் சங்க மக்கள் பருத்தி எடுத்து பயன் படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. பருத்தி நூல் கொண்டு ராட்டையின் மூலம் நூல் நூற்றலையும் கைத்தறியை பண்டைக்காலம் தொட்டே தமிழர் அறிந்திருந்தனர்.





> "வில்லெறி பஞ்சியின் வெண் மழை தவழும்
> கொல்லை தைஇய குறும் பொறை மருங்கில்"

(அகம் 133)

எனும் அகநானூற்றுப் பாடலில் வில் அடித்து பஞ்சிலிருந்து விதை நீக்கப்பட்டதாகவும் விதை நீக்கப்பட்ட பஞ்சு வெண் மேகம் போலக் காணப்படுவதை குறிப்பிடுகிறது. மேலும்,

> "பருத்திப் பெண்டு"

(புறம் 125)

என்றும், காப்பியத்தில்

> "நூலினு மயிரினு நுழைநூற்பட்டினும்
> பால்வகை தெரியாப் பன்னூறடுக்கத்து நறுமடி
> செறிந்த வறுவை வீதியும்"

(சிலப்பதிகாரம்)

என்று சிலம்பில் இளங்கோவடிகள் பண்டைத் தமிழரின் நெசவின் பெருமையைக் குறிப்பிடுகின்றார்.

## உழவுத்தொழில்

உயிர் வாழ்வதற்கான வாழ்வாதாரப் பொருள் உணவு இவ்வுணவை உருவாக்க உழவுத்தொழிலை மேற்கொண்டவர் உழவர்கள் 'உழவில்லையேல் உணவில்லை' என்று உலகில் உள்ளோர் அனைவருக்கும் உழவுதான் உயிர் என்பதை சங்க நூல்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை வலியுறுத்துகின்றன. உழவர்கள் நெல் மிக்க ஊரை உடையவர்கள் என்பதை,

> "பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளான்"

என்ற அடியின் மூலம் மருத நிலத்தில் உழவுத் தொழிலை மேற்கொண்டு நெல் விளைந்து விளைச்சல் பெருகியுள்ளமையை அறிய முடிகின்றது. மனித சமூகங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வேளாண்மை செய்து வந்துள்ளன.

> "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"

(1031 குறள்)

என்று வள்ளுவர் உலகில் நடை பெறும் தொழில்களில் தலைமைத் தன்மை வாய்ந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றார். கண்ணதாசன்,

"எங்க ஏரோட்டம் நின்னு போனா
உங்க காரோட்டம் என்னவாகும்"

என்று இன்றைய விவசாயம் அழியும் நிலையை கேள்வியுடன் கவிதையாக எழுதியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் கவியுலகில் விவசாயம் நாளும் சுய கொலை, என்ற நிலையை எடுத்தியம்புகின்றது. காட்டைத் திருத்தி கழனியாக்கம் செய்தது ஒரு காலம், இன்றோ காடுகளை அழித்து நகரமயமாக்கலும், பல்வேறு தொழில் மேம்பாட்டுத் துறைகளும் எனப் பல்வேறு திட்டங்களைத் திட்டமிடுகின்றனர்.

## நீா் நிலைகளை உருவாக்குதல்

சங்க கால மக்கள் நீா் நிலைகளைப் பெருமளவில் பராமரித்துள்ளனர். ஏனெனில்

"நீா் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"

(குறள் 10)

நீரின்றி இவ்வுலகமே இல்லை என வள்ளுவப் பெருந்தகை சுட்டியுள்ளதை சங்க மக்கள் உணர்ந்திருந்தனர். எனவே, தான் நீா் நிலைகள் பல உருவாக்கியுள்ளனர். அவ்வகையில் கிணறு வெட்டி நீா் எடுத்துள்ளமையை

"தோட்பதன் அமைத்த கருங்கை ஆடவர்
கனைபொறி பிறப்ப நூறி வினைப் படர்ந்து
கல்லுறுத் தியற்றிய வல்லுவர்ப் படவில்
பாருடை மருங்கின் ஊறல்"

(அகம் 79: 1-4)

என்ற பாடலின் வழி ஆண்கள் வெட்டிய நீா் நிலையில் நீா் ஊறியுள்ளமையை அறிய முடிகின்றது. மேலும் பாலை நிலத்தில் கோவலா் தம் ஆறிரைகளின் குடிநீா் தேவைக்காகக் (கூவல் என்னும் சொல் கிணறு பள்ளம் என்று பொருள்) கூவல் உருவாக்கியுள்ளனா் என்பதை அறிய முடிகின்றது.

"பரல் மண் சுவல முரண் நிலம் உடைத்த
வல்வாய்க் கணிச்சிஇ கூழார் கோவலா்
ஊறாது இட்ட உவகைக் கூவல்"

(அகம் 21: 21-23)





என்றும் அடிகள் கிணறு வெட்டியதை பதிவு செய்கின்றது. மேலும் கோவலா் வெட்டிய கூவலில் இருந்து யானை போன்ற விலங்குகள் வந்து நீா் அருந்தியமையை,

"கோவலா் கூவல் தோண்டிய
கொடுவாய்ப் பத்தல் வார்ந்துகு சிறுகுழி
நீா்க்காய் வருத்தமொடு சோர்விடம் பெறாது
பெருங்களிறு மிதித்த அடியகத்து இரும்புலி"

(அகம் 155 :8-11)

என்ற அடிகளிலும்,

"...... நீடு மருப்ப ஒருத்தல்
பிணரழி பெருங்கை புரண்ட கூவல்
தெண்கண் உவர்க் குறைக்குட முகவை"

(அகம் 201:9-11)

என்ற அடிகளில் பாலை நிலத்தில் நீரின்றி இருக்கும் மக்களுக்கு கிணற்று நீா் பயன்பட்டமை இதன் வழி அறிய முடிகின்றது.

## மீன் பிடித்தல்

பரதவர்கள் மீன் பிடிக்க வலைகளைப் பயன்படுத்தியுள்ளனா். சுறா மீன்களை உளி எறிந்து பிடித்துள்ளனா் என்பதை,

"....... ...... நோன் புரிக்
கயிறு கடையாத்த கடுநடை ஏறி உளித்
திண் திமில் பரதவா் ஒண்சுடர் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி, வைகறைக்
கடல்மீன் தந்து கானற் குவைஇ"

(நற் 388)

என்ற பாடலில் வலிமையான பரதவா் இரவு நேரங்களில் மீன் வேட்டைக்குச் சென்றதை அறிய முடிகின்றது. மேலும்,

"வாள் வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி
நாள் வேட்டு எழுந்த நயனில் பரதவா்
வைகு கடல் அம்பி"

(அகம் 187 21-23)

என்ற அடிகளின் வழியும் சங்க கால மக்கள் மீன் பிடித்தல் தொழிலையும், அதனோடு உப்பு விளைவித்தலையும் செய்துள்ளதை அறிய முடிகிறது. நாடு வளம் பெற்று இருக்க அந்நாட்டின்

பொருளாதாரம் செழிப்பாக இருத்தல் அவசியம். பொருளாதாரம் செழிக்க பலவிதமான தொழில்கள் சிறப்புடன் நடைபெற வேண்டும். அவ்வகையில் முல்லை நில மக்கள் எருது, பசு, ஆடு, முதலிய ஆநிரைகளை மேய்த்துப் பாதுகாத்தல், அதன் மூலம் கிடைக்கப்பெறும் பால், நெய், தயிர், மோர் முதலியவற்றை விற்றும் பண்டமாற்று செய்தும் பல தொழில்களைப் பெருக்கியுள்ளனர். ஆநிரைகளை மேய்த்தலை,

"ஆடுடையிடை மகன்"

(நற் 266:3)

"ஆடுதலைத் துருவின் தோடுதலை பெயர்க்கும்
வன்கையிடையன் ......"

(நற்:169:6-7)

என்னும் அடிகள் முல்லை நிலமக்களின் முக்கியத் தொழிலாக அமைந்ததை அறிய முடிகின்றது.

இவ்வகையாக சங்க கால மக்கள் எல்லாத் துறையிலும் உள்ள தொழில்களைத் தாணாகவே கண்டு கேட்டு பின்பற்றியும், பயன் படுத்தியும் வாழ்ந்துள்ளனர். பெரும் பான்மையான மக்கள் சிற்றூர்களில் அவரவர்க்குரிய தொழில்களைச் செய்து வாழ்ந்துள்ளனர் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு,உடை, இருப்பிடம் ஆகியவை தொழில்களால் கிடைக்கப் பெற்று வாழ்ந்துள்ளனர்.

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்

# தமிழ் இலக்கியங்களில்
# காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

# நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் தகுதி பெற்றது)

ஐ.எஸ்.ஐ 9001-2015 தரச் சான்றிதழ் பெற்றது

பொள்ளாச்சி – 642 001

## தமிழ்த்துறை

## தமிழ் ஆய்வாளர் மன்றம் நடத்தும்

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம் - International Seminar)

18.10.2019

## சான்றிதழ்

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த்துறையின் தமிழ் ஆய்வாளர் மன்றம் நடத்திய "தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்" எனும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் முனைவர் / பேரா. / செல்வன் / செல்வி ....ந. ஜெயசுதா.................அவர்கள் ....சமூகச்.....சூழலுக்கு.......... ஏற்ற...அற இலக்கியம்........என்னும் தலைப்பில் கட்டுரையாளராக / பங்கேற்பாளராக/ அமர்வுத் தலைவராகக் கலந்து கொண்டார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ப. பிரதாப் | முனைவர் ச. முத்துவேல் | முனைவர் பொ.மா. பழனிசாமி | டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் |
| கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் | தமிழ்த்துறைத் தலைவர் | முதல்வர் | கல்லூரித் தலைவர் |

48. அகநானூற்று மலர்கள் உணர்த்தும் காலமும் கருத்தும் 303
முனைவர் வெ.பரிமளம்

49. தமிழில் அறநெறியும் சமயநெறியும் 309
ப.பிரதாப்

50. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் 314
ம. இராஜகோபால்

51. குறுந்தொகையில் சூழலியல் 321
நா.ரம்யா

52. காலமாற்றத்தினூடு பயணிக்கும் தமிழிலக்கியம் 326
சக்தி சக்திதாசன்

53. சங்ககாலக் கல்வி முறையும் தற்காலக் கல்வி முறையும் 331
வே.சக்திவேலு

54. அறநூல்கள் காட்டும் காலச் சூழல் 336
பா. சூரியப்பிரகாஷ்

55. புறநானூற்றில் சூழலியல் 341
மு.சரண்யா

56. வீரக்கற்கள் அல்லது நடுகற்கள் வழிபாட்டின் 346
காலமும் சூழலும் - ஆ. திலகவதி

57. தமிழிலக்கியங்களின் காலம் 355
சு. யசோதா

58. தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும் 360
முனைவர் அமுதன்

59. சமூகச் சூழலுக்கு ஏற்ற அற இலக்கியம் 365
முனைவர் ந.ஜெயசுதா

60. சமண இலக்கியங்களின் காலமும் கருத்தும் 371
கொங்கு நாட்டை முன் வைத்து
முனைவர் அ.வெண்ணிலா இராஜேஷ்

61. நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படும் காலமும் சூழலும் 378
பா. அஞ்சலி

62. சங்க இலக்கியத்தில் மலர்கள் பயன்பாட்டுச் சூழல் 387
முனைவர் செ.ஜமுனா

63. சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழல்கள் 394
ம.காயத்ரி

புது நெறியைப் பழையன கழிதலும் புதியன புகுவதும் வழுவன்று என்று பன்னெடு நாள் அநுபத்தால் கண்டு படித்து

"யாரொடும் பகை கொள்ளுதல் இல்லெனில்
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது." - கம்பர்
"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்" - திருவள்ளுவர்
"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" - திருமூலர்
"எல்லோரும் இன்புற்றிருக்க இருப்பதுவே அல்லாமல்
வேறொன்று அறியேன் பராபரமே" - தாயுமானவர்
"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"
- வள்ளற் பெருமான்

இந்தப் பொன்னனைய வரிகளை உலகில் எங்கு போய்த் தேடினாலும் நீங்கள் ஏமாந்து போவீர்கள். இது தமிழ் உலகம்; உலகம் நன்முறையில் வாழக் கொடுத்த அற்புத வரிகள்! தமிழ் காலந்தோறும் சூழலுக்கு ஏற்ப பழையன கழிந்து புதியன புகச் செய்து மண்ணுல மக்கள் இன்புற்று வாழ என்றும் வழிகாட்டி நிற்கிறது.

வாழ்க மாந்தரினம்! வீழ்க பகை அனைத்தும்!

# 59. சமூகச் சூழலுக்கு ஏற்ற அற இலக்கியம்

முனைவர் ந.ஜெயசுதா
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

காலங்கள் மாற மாற சூழலும் சூழ்நிலைகளும் மாற்றம் பெறுகின்றன. ஆதி காலம் தொட்டு இக்காலம் வரை மனிதன் பல பரிணாமங்களைச் சந்தித்துக் கொண்டு வருகின்றான். அப்பரிணாமங்கள் நம் இலக்கியங்கள் வாயிலாக கண்டு கொள்ள முடிகின்றது. ஒவ்வொரு கால கட்டத்திலும் மனிதனின் செயல்பாடுகளுக்கு ஏற்ப இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. அவ்வகையே சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை பல படைப்புகள் மக்கள் சூழலியலுக்கு ஏற்ப அமைக்கப் பட்டுள்ளன.

சங்க இலக்கியத்திற்கு பின் களவு, கற்பு வீரத்தோடு, அறமும் நீதியும் வேண்டும் என்ற நோக்குடன் சங்கம் மருவிய காலத்தில் அற இலக்கியம் தோன்றியது. எங்கெல்லாம் குற்றங்கள் அதிகமாகின்றதோ அங்கெல்லாம் இறைவன் அவதாரம் எடுத்துள்ளான் என்று புராணங்கள் கூறுகின்றன. அவ்வாறே காலவோட்டத்தில் சமூகச்சூழலுக்கு ஏற்ப இலக்கியங்கள் ஒவ்வொரு பரிணாமங்களைப் பெற்று அற நூல்களும் தோன்றியுள்ளன.

இன்றைய சமூகம் அதிநவீன வளர்ச்சியில் பன்மடங்கு வளர்ந்து பொருளாதாரத்தில் உயர்நிலை அடைந்தாலும், குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் பல பின்னடைவுளையே சந்தித்து வருகின்றது. வாழ்விற்குத் தேவையான போதிய அறக்கருத்துக்கள் அவர்களை வந்தடையவில்லை. காரணம், பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அரை வயிரும், கால் வயிருமாக உணவு

உண்டு காலவோட்டத்தில் பயணிக்கின்றனர். அத்தகைய அவசரகாலகட்டம் இன்று. எனவே மனிதன் சமூகத்தோடு மட்டுமே தன்னைப் பார்க்கின்றான் குடும்ப உறவுகளோடு பார்க்கத் தவற விடுகின்றான் ஆக, வாழ்க்கைக்குத் தேவையான நல்ல அறக்கருத்துக்களையும் நல்ல மருத்துவக் குறிப்புகளையும், வாழ்வியல் சிந்தனைகளையும் தமிழில் தோன்றிய அற இலக்கியங்கள் பல விரிவாக எடுத்துரைக்கின்றன. அவற்றை நினைவு கூற, மீண்டும் பின்னோக்கிச் சென்றால் அவற்றில் பதினென் கீழ்க்கணக்கு முதன்மையானது. அங்கிருந்து அக்கருத்துக்களை எல்லாம் எடுத்து வந்து நம் வாழ்வோடு சேர்க்கவே இக்கட்டுரை.

## அற இலக்கியம்

ஆத்திச்சூடியில் பாரதியார் "நீதி நூல் பயில்" என்கிறார். அறத்தின் தேவையை உணர்ந்து. ஆற நூல்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழின் மரபு.

பதினெண்கிழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் பதினொன்று, நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருளையும் கூறும் நூல்கள் திருக்குறளும் நாலடியாரும். அதனால் இவையிரண்டும் பழங்காலம் முதல் போற்றப்பட்டுள்ளன. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி போன்ற பழமொழிகளை நினைக்கலாம். மேலும், திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்றவை மருத்துவ குணம் கொண்டவைகள்.

பிற்காலத்திலும் அறநூல்கள் தோன்றின. ஔவையார் பாடிய ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்றவையும், சிவப்பிரகாசர் பாடிய நன்னெறி, குமரகுருபரர் பாடிய நீதி நெறி விளக்கம், அதிவீரராம பாண்டியர் பாடிய வெற்றி வேட்கை, உலகநாதப் பண்டிதரால் பாடப் பெற்ற உலக நீதி,



மயூரம் வேதநாயகம் பிள்ளையால் பாடப்பெற்ற நீதிநூல் பெண்மதி மாலை போன்றனவும் அற நூல்களாக எழுந்தன. முற்கால நீதிநூல்களைப்போலவே பிற்கால நீதிநூல்கள் அறக்கருத்துக்களை வலியுறுத்துவதில் சிறந்துள்ளது.

அனுபவங்களோடு சுருங்க உரைத்தலும், மனதில் பதியுமாறு பொன் மொழிகள் போன்றும் தனித்தன்மையோடு அற இலக்கியங்கள் விளங்குகின்றன.

சங்கப் பாடல்களில் ஊன் உண்பதும், மது அருந்துவதும், பரத்தையரோடு இன்புற்று இருப்பதும் என்றவாறே இயல்பு நடைமுறையில் இருந்துள்ளது. ஆனால் திருக்குறள் போன்ற நூல்கள் இவ்வழக்கத்தை மிகவும் கண்டிக்கின்றது. பண்டைத் தமிழ் மக்கள் தனி மனிதனையும், சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தை கருதினர்.

## கல்வி

அக்காலம் முதல் இக்காலம் வரை கல்வி குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகமாகவே உள்ளது. காலத்தைப்போக்காது 'இளமையிலே கல்' என்கிறது.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு"

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகு அல்ல- நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு" (நாலடியார் 131)

ஒருவர்க்கு கல்வி அழகே அழகாகும், மற்ற அழகெல்லாம் அழகல்ல என கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. இக்கல்வியைக் கற்றுக்கொடுக்கும் ஆசானையும் போற்றுகின்றது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது போல,

"கணக்காயர் இல்லாத ஊரும்"

(திரிகடுகம்10)

என்ற வரிகள் ஆசிரியர் இல்லாத ஊரிலும் குடியிருக்கக்கூடாது என்று கூறுவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தையும், கல்வி கற்றுத்தருபவக்கு தரும் மதிப்பையும் அறியமுடிகின்றது. மதிப்பும் மரியாதையும் கற்றுத் தருபவர். தாய் தந்தைக்கு அடுத்தபடியாக குருவை வழிபட்டனர் முன்னோர்கள்.

## ஆசைப்படுதல்

அவா என்றும் இச்சை என்றும் ஆசை என்றும் பலவாறாக சொல்லப்பட்டாலும் மனிதனின் மனத்தில் அழிக்க முடியாமல் மனிதனையே அழிக்கும் குணம் ஆசை. பேராசை இருந்தால் அது மிகவும் கொடுமையானது. ஆசை இல்லாதவர்க்குத் துன்பம் இல்லை என்பதை,

"அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்
துவா அது மேன்மேல் வரும்" (குறள்368)

ஏன்ற அடிகளும், ஆசைப்படலாம் பிறர் பொருளின் மீது ஆசைப்படக்கூடாது.

"நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்"
(குறள் 171)

என்ற குறளின் வழியாக, பிறருக்குரிய நல்ல பொருளை ஒருவன் விரும்பினால் அவனுடைய குடியும் அழிந்து, குற்றங்கள் வந்து சேரும் என்கிறது. ஆசையே துன்பத்திற்கு காரணம். மேலும், திரிகடுகத்தில்,

"ஆசை பறன்கட் படுதலும்"

என்ற வரிகள் அடுத்தவர் பொருளின் மீது ஆசைப்பட்டால் நமக்கு நாமே துன்பத்தை ஏற்படுத்துதலுக்குச் சமமாகும்.

## பகுத்து உண்ணுதல்

உணவு உண்ணும் போது தான் மட்டும் உண்ணாது பிறருக்கும் மகிழ்வோடு அளித்துண்ணுதல் நல்ல பண்பாகும்.



இதை,

"உண்ணும் போது யாவர்க்குமாம் ஒரு கைப்பிடி"

என்ற முதுமொழி விளக்குகின்றது. மேலும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் 322)

என்ற குறளும், பறவை இனமான காகம் தன் இனத்தைக்கரைந்து அழைத்து உண்ணுகின்ற செய்தியும் பகிர்ந்து உண்ணுதலின் அவசியத்தை உணர்த்துகின்றது. இழிகுலத்தோர்க்கும் உணவு கொடுக்க வேண்டும் என்பதை,

"இழியினர்க்கே யானும் பசித்தார்க்கு ஊண் ஈதல் கடன்"
(சிறுபஞ்சமூலம் 77)

என்ற பாடலில் இழிகுலத்தோர்க்கு உணவு அளிக்க வேண்டும் என்கிறது.

## உணவே மருந்து

உணவே மருந்து மருந்தே உணவு என்பார்கள், இதனை வள்ளுவர்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

உயிர் வாழ்வதற்காகவும், உடல் வளர்ச்சிக்காகவும் உயிரினங்கள் அனைத்திற்கும் தேவையானது உணவு. அவ்வுணவே உடலுக்கு மருந்தாகின்றது. அவ்வுணவு எப்பொழுது தேவை என உடல் உணர்வை ஏற்படுத்துகின்றதோ அப்பொழுது தான் உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். பசி எடுத்தால் மட்டுமே உண்ண வேண்டும் சுவையறிந்து உண்ணுதலும் நலம் பயக்கும். இதனை வள்ளுவர்,

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசி"

என்கிறார். உணவை அளவாக உண்ணுதல் அவசியம் என்பதை,

"ஒரு வேளை உண்பான் யோகி
இரு வேளை உண்பான் போகி
மூன்று வேளை உண்பான் ரோகி
நான்கு வேளை உண்பான் உடலை விட்டுப்போகி"

என்ற அடிகள் அளவாக உணவை உண்ணும் முறையை எடுத்தியம்புகின்றது. மேலும், அவ்வுணவு செரித்த பின் தான் மறுபடியும் உண்ண வேண்டும். என்பதை,

"உடம்பார் அழியினுயிரா ரழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேனுயிர் வளர்த்தேனே"

(திருமந்திரம்)

என்ற அடிகள் விளக்குகின்றன.

இவ்வாறு, பல கருத்துக்களை அற நூல்கள் வழங்குகின்றது. காலங்கள் மாறினாலும் சமூகம் மேம்பாடு அடைந்தாலும் வாழ்வோடு ஒத்த இலக்கியங்களே உருவாகின்றன. மாற்றத்திற்கு எற்ப இலக்கியம் மாறினாலும் அறநூல்கள் போதிக்கும் அறம் மாறுவதில்லை. புதுப்பொலிவுடன் நாளுக்கு நாள் வலம் வருகின்றது.